Journal of Valartamil, eISSN 2716-5507
Volume 5, No.2, 2024, (25-32)

# ‘Story Board’ அணுகுமுறையின் வழி ஐந்தாம் படிவம் மாணவர்களுக்கு தமிழ் இலக்கணம் கற்பித்தல்

A story board approach to teaching Tamil grammar to Form V students

**Tasheni Muniandy**
Fakulti Bahasa Dan Komunikasi, Universiti Pendidikan Sultan Idris,
35900 Tanjong Malim, Perak, Malaysia
Email: kaaminy@fbk.upsi.edu.my

**Published:** 20 October 2024

**To cite this article (APA):** Muniandy, T. (2024). ‘Story Board’ அணுகுமுறையின் வழி ஐந்தாம் படிவம் மாணவர்களுக்கு தமிழ் இலக்கணம் கற்பித்தல்: A story board approach to teaching Tamil grammar to Form V students. *Journal of Valartamil, 5*(2), 25-32. https://doi.org/10.37134/jvt.vol5.2.4.2024

**To link to this article:** https://doi.org/10.37134/jvt.vol5.2.4.2024

**சுருக்கம்:** உயர்நிலைப் பள்ளி மாணவர்களின் தமிழ் மொழியைக் கற்றுக்கொள்வதில் வாய்மொழித் திறன்களை வளர்க்க ஜான் டீவியின் கல்விக் கோட்பாட்டின் பயன்பாட்டை இந்த ஆய்வு ஆராய்கிறது. அனுபவ கற்றல், மாணவர்களை மையமாகக் கொண்ட அறிவுறுத்தல் மற்றும் ஆராய்ச்சி அடிப்படையிலான முறைகள் ஆகியவற்றில் டீவியின் முக்கியத்துவம் வாய்வழி தொடர்பு திறன்களை மேம்படுத்துவதற்கான மதிப்புமிக்க கட்டமைப்பை வழங்குகிறது. இரண்டு நோக்கங்களை அடைய இந்த ஆய்வு நடத்தப்பட்டது. வாய்மொழித் திறனில் படிவம் 3 மாணவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளைக் கண்டறிவதே முதல் நோக்கமாகும். ஜான் டீவியின் அனுபவ கற்றல் கோட்பாட்டின் மூலம் படிவம் 3 மாணவர்களின் வாய்மொழி திறன்களை மேம்படுத்துவது இரண்டாவது நோக்கமாகும். பினாங்கில் உள்ள பட்டர்வொர்த்தில் உள்ள பட்டர்வொர்த் கான்வென்ட் உயர்நிலைப் பள்ளியிலிருந்து 23 பெண் படிவம் 3 மற்றும் 4 ஆசிரியர்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட அளவு மற்றும் தரமான தரவுகளுடன், கலவையான அணுகுமுறையைப் பயன்படுத்தி இந்த ஆராய்ச்சி நடத்தப்பட்டது. தரவைச் சேகரிக்கப் பயன்படுத்தப்படும் கருவிகளில் முன்-சோதனைகள், செயல்பாடுகளுக்குப் பிந்தைய சோதனைகள், நேர்காணல்கள் மற்றும் அவதானிப்புகள் ஆகியவை அடங்கும். ஆரம்ப சோதனைக்குப் பிறகு, மாணவர்களின் வாய்மொழித் திறனை மேம்படுத்துவதற்காக குறைந்தபட்ச ஜோடி பயிற்சி, பங்கு-விளையாட்டு, WH கேள்விகள் மற்றும் கற்றல் ட்ரையோஸ் A-B-C ஆகிய 4 செயல்பாடுகளை ஆராய்ச்சியாளர் மேற்கொண்டார். குறிப்பாக, இடைநிலைப் பள்ளி மாணவர்களுக்கான தமிழ் மொழிக் கல்வித் திட்டத்தின் பின்னணியில் டீவியின் கொள்கைகளை எவ்வாறு செயல்படுத்தலாம் மற்றும் மாணவர்களின் சரளமாக, தன்னம்பிக்கை மற்றும் தகவல்தொடர்புகளில் விமர்சன சிந்தனையை மேம்படுத்தலாம் என்பதை இந்த ஆராய்ச்சி ஆராய்கிறது.

மொத்தத்தில், மாணவர்களிடையே பேசும் திறனில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி இருப்பதை தேர்வு முடிவுகள் வலியுறுத்துகின்றன.

**முக்கிய வார்த்தைகள்:** ஜான் டீவியின் கல்விக் கோட்பாடு, தமிழ் மொழி கற்றல், படிவம் 3, பட்டர்வொர்த் கான்வென்ட் உயர்நிலைப் பள்ளி

**Abstract:** This study explores the application of John Dewey's educational theory to develop the oral skills of high school students in learning Tamil. Dewey's emphasis on experiential learning, student-centered instruction, and research-based methods offers a valuable framework for improving oral communication abilities. This study was conducted to achieve two objectives. The first objective is to identify the problems faced by Form 3 students in oral skills. The second objective is to improve the oral skills of Form 3 students through John Dewey's Experiential Learning theory. This research was conducted using a mixed approach, with quantitative and qualitative data collected from 23 female Form 3 and 4 teachers from Butterworth Convent High School in Butterworth, Penang. Instruments used to collect data include pre-tests, post-activity tests, interviews, and observations. After the initial test, the researcher carried out 4 activities namely Minimal Pair Practice, Role-Play, WH Questioning, and Learning Trios A-B-C to improve the oral skills of the students. Specifically, this research investigates how Dewey's principles can be implemented in the context of a Tamil language education program for secondary school students and improve students' fluency, confidence, and critical thinking in communication. Overall, the test results emphasize that there is significant growth in speaking skills among students.

**Keywords:** John Dewey's educational theory, Tamil language learning, Form 3, Butterworth Convent High School

## முன்னுரை

இலக்கணத்தைப் போதிப்பதில் கருத்துகள் தெரிகைகப்பட்ட வண்ணபாக உள்ளன . ஏனெனில், சிறந்த போதனை முறை என்று ஒன்றை மட்டுமே குறிப்பிட்டுச் சொல் on இயலாது. விதிவிளக்கு முறை அல்லது விதிவரு முறை எதுவாயினும் இலக்கணம் கற்றல் கற்பித்தல், மாணவர்களின் நிலைக்கேற்பவே அமையவேண்டும். கற்றல் கற்பித்தலில் சூழலமைவு கற்றல் முறை மாணவர்களைக் கலகலப்பாகவும் புதுமையாகவும் கற்கும் சூழலை உருவக்கப் பெரும் பங்காற்றுகிறது.

மேலும் 'Story board'டின் வரையறை ஓரளவு ஒரு காட்சி வழியாக கதைகளைச் சொல்வது என்று கூறப்படுகின்றது. 'Story board' என்பது ஊடாடும் மல்டிமீடியா தயாரிப்புக்கான ஆவணங்கள் ஆகும். இதை படங்களின் வழி விளக்கமாக வரையறுக்கப்படுகிறது. ஒரு கதை, அனிமேஷன், மோஷன் கிராஃபிக் மற்றும் ஊடாடும் மீடியாவின் வழி காட்சிப்படுத்துவதுதான் 'Story board'. வீடியோ அல்லது அனிமேஷன் தயாரிப்பில் முக்கிய கருத்துகளை எளிதில் தெரிவிப்பதற்கு 'Story board' உதவுகின்றது. 'Story board' ஒரு முக்கிய வடிவமைப்பு ஆவணமாகவுள்ளதால் தயாரிப்புக் குழு வழிகாட்டியாகப் பயன்படுத்தி இதனை ஊடாடும் திட்டம் செயல்படுத்தவுள்ளனர். உள்ளடக்கம், கிராபிக்ஸ் போன்ற பல்வேறு பாட கூறுகளின் உள்ளடக்கம் எவ்வாறு உள்ளது என்பதை இது காட்டுகிறது மற்றும் அனிமேஷன் ஒழுங்கமைக்கப்படும்

(தொகுதி மூலம் தொகுதி, திரை மூலம் திரை), மற்றும் இறுதி தயாரிப்பாக அது எவ்வாறு ஒருங்கிணைக்கப்படுகின்றது என்பதை உணர்த்துகின்றது. 'Story board' உள்ள தகவல்கள் பெரும்பாலும் மதிப்பாய்வு செய்யப்பட்டு வாடிக்கையாளர்களால் அங்கீகரிக்கப்பட்டு மேலும் மேம்படுத்தும் முயற்சி தொடங்கும்.

அனிமேஷன் வரலாற்றில், முதல் 'Story board' ஸ்டுடியோவில் 1930 களின் உருவாக்கப்பட்டது. அப்பொழுது அனிமேட்டர் வெப் ஸ்மித் ஒரு கார்ட்டூன் கதையை விளக்குவதற்கு வால்ட் டிஸ்னிடம் கொண்டு வந்தார். அவர் தனித்தனி காகிதத் தாள்களில் தொடர்ச்சியான காட்சிகளை வரைந்து தனது அலுவலகம் சுவர்களில் பொருத்தினார். வால்ட் டிஸ்னி மற்றும் பிற அனிமேஷன் ஸ்டுடியோக்களில் இதே போன்ற செயல்முறைகள் பயன்பாட்டில் உள்ளன. ஆரம்பகாலங்களில் 'Story board' மிகவும் நன்கு அறியப்பட்டு பயன்படுத்திய அனிமேஷன் திரைப்படமான ஸ்னோ ஒயிட் மற்றும் ஏழு குள்ளர்கள் ஆகும். அனிமேஷன் துறையில் மட்டுமல்ல, மற்ற துறைகளில் மற்றும் களங்களில் 'Story board' மேம்பாட்டிற்கு உதவுவதற்கான ஒரு கருவியாக பல ஆய்வுகளில் பயன்படுத்தப்பட்டது. இப்போதெல்லாம், மக்கள் கதைகளை காட்சிகளுடன் இணைக்க முடியும். மேலும் ஒரு கதையில் புதைநிலை கருத்துகள் இருந்தலும் போது கதையை நன்றாக நினைவில் வைத்துக் கொள்ள முடிகின்றது. சில திரைப்படத் திட்டங்கள் ,வணிக விளம்பரம், போன்றவை 'Story board' வழி பெரிதும் பயனடைகின்றன.

## ஆய்வுப் பின்னணி

மொழியைப் பிழையின்றிப் பேசுவதற்கும் எழுதுவதற்கும் இலக்கணம் பயன்படுகிறது சொற்களை விளக்கும் கருவியாக இலக்கணம் அமைகிறது இலக்கணம் என்பது பழைய மொழிக்கு விளக்கம் கூறும் மரபிலக்கண நூல்களின் செய்திகள் மட்டுமல்ல அன்றாடம் நாம் பேசும் எழுதும் மொழியின் அமைப்பையும் ஒழுங்கு நெறியையும் கூறுவதாகும் (தமிழ்ப்பல்கலைக்கழகம். 2013). இலக்கண ஆசிரியர் பாடம் கற்பிக்கும் போது அந்தக் கால மொழிச்சூழலை மாணவர்களுக்குக் கற்றுக் கொடுத்து அதன் மூலம் அக்கால மொழிப்பயன்பாடு எவ்வாறு இருந்தது?அந்த மொழிக்குரிய இலக்கணம் இவையென்று தெளிவுபடுத்த வேண்டும் காலந்தோறும் மொழியானது மாறுதலுக்குட்பட்டது எனவே, மரபிலக்கணத்தைக் கற்பிக்கும் போதே தற்போதுள்ள மொழியின் நிலை என்ன? என்பதையும் விளக்கி மாணவர்களுக்கு வேறுபாட்டை உணரும் திறனை ஏற்படுத்த வேண்டும்.

மரபிலக்கண நூல்கள் தம் காலத்துப் பேச்சு வழக்கு, செய்யுள் வழக்கு ஆகியவற்றின் இலக்கணமே கூறுகின்றன. இதனையே தொல்காப்பியப் பாயிரம் வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின் என்ற தொடரால் குறிக்கின்றது (தமிழண்ணல், 2011). இவை தவிர பல நூற்பாக்களின் செய்திகள் இக்காலத் தமிழுக்கும் பொதுவானவையாகக் காணப்படுகின்றன. எனவே, இலக்கணப் பாடத்திட்டம் மாணவர்களின் புரிதல் திறனுக்கு ஏற்பவே அமைய வேண்டும். பாடத்தில் உள்ள எடுத்துக்காட்டுகளை மட்டும் கூறாமல், மாணவர்களைச் சிந்திக்க வைத்து எடுத்துக்காட்டுகள் கூறிய பின் நாம் தேர்வுகள் நடத்த வேண்டும். எழுத்து மரபு சொல் மரபு, தொடர் மரபு, புணர்ச்சி மரபு, பிழை

நீக்கிப் பேசுதலும் எழுதுதலும், யாப்பறிவு, அணியறிவு ஆகியவற்றின் வழி மாணவர்களின் மொழியறிவை வளர்த்தலே இலக்கணப் கற்றல் கற்பித்தலில் அவசியமாகும்.

இக்காலக் கட்டத்தில் இலக்கணம் மேல் உள்ள 'பயம்' மாணவர்களை இலக்கண அறிவைப் பயன்படுத்த விடாமல் தடுக்கிறது. எடுத்துக்காட்டாக, தொடக்கப்பள்ளியில் பெரும்பான்மையான மாணவர்கள் 'இறைவனிடம் இருந்து என்று தான் எழுதுகிறார்கள். அச்சொற்களை இணைத்து 'இறைவனிடமிருந்து' என எழுதினால் தமிழ் இலக்கணப் பயன்பாடு (புணரியல்) அதிகரிப்பதோடு; தமிழின் இனிமையும் கூடுகிறது. இவ்வாறாக, மாணவர்கள் கட்டுரை எழுதும் போதும் ஒரே சொற்களைப் பல தடவை பயன்படுத்துவார்கள். உதாரணத்திற்கு, 'அந்தக் காடு பல உயிரினங்களுக்கு வசிப்பிடம் என்றால் மிகையில்லை. எனவே, அந்தக் காட்டை அழிப்பது கண்டிக்கத் தக்க விடயமாகும்! இப்பத்தியில் 'அந்தக் காடு' என்ற சொற்றொடர் இரண்டு தடவை பயன்படுத்தப்பட்டுள்ளது (இரண்டாம் தடவை வேற்றுமை உருபு ஐ ஏற்றுள்ளது). மாணவர்கள் அந்தக் காடு என இரண்டாம் முறை பயன்படுத்தும் போது 'அக்காடு' என்று பயன்படுத்தினால் மாணவர்களின் இலக்கண அறிவும் (புணரியல்) மொழி ஆளுமையும் புலப்படும். மேற்கண்ட பத்தியை, அந்தக் காடு பல உயிரினங்களுக்கு வசிப்பிடம் என்றால் மிகையில்லை. எனவே, அக்காட்டை அழிப்பது கண்டிக்கத் தக்க விடயமாகும் என எழுதலாம். இல்வகையான மொழி ஆளுமை தான் மாணவர்களிடத்தில் எழுத்துத் திறனை உண்டாக்கும். வருங்கால தன்னம்பிக்கையான மலேசியத் தமிழ் எழுத்தாளர்களை உருவாக்கவும் வழிவகுக்கும்.

இப்பிரச்சனையைக் களைய வேண்டுமாயின் இலக்கணம் கற்பித்தலில் மாற்றம் ஏற்பட வேண்டும். தேசியக் கல்வி மேம்பாட்டுப் பெருந்திட்டத்தில் (2013-2025) மலேசிய மாணவர்கள் உலகளாவிய தரத்தை அடைய வேண்டும் என்பது குறிக்கோளாகும். நாட்டின் கல்வி வளர்ச்சிக்கு ஏற்ப கற்பித்தலிலும் புதுமையைக் கையாள வேண்டும். மாணவர்களின் சிந்தனைத் திறனைத் தூண்டிப் பிரச்சனைகளைக் களையும் ஆற்றலை விதைக்க வேண்டும். இலக்கணம் கற்பித்தலில் செய்யப்படும் புத்தாக்கம் மாணவர்களுக்கு இலக்கணம் கற்றலில் ஆர்வத்தைத் தூண்ட வேண்டும். மாணவர்கள் இலக்கணப் பிழையின்றி பேசவும் எழுதவும் வேண்டும்.

## ஆய்வுச் சிக்கல்

மலேசிய நாட்டில், தொடக்கப்பள்ளி தொடங்கி பல்கலைக்கழகம் இலக்கணம் மாணவர்களின் பாடத்திட்டத்தில் புகுத்தப்பட்டுள்ளது. ஆனால், எல்லா நிலையிலும் மாணவர்கள், இலக்கணத்தில் காணப்படும் விதிகளைப் புரிந்து கொள்வதில் சிக்கலை எதிர்நோக்குகின்றனர். உதாரணமாக இலக்கண விதிகள் பெரும்பாலும் சிக்கலானவை மற்றும் நினைவில் கொள்வது கடினம். மாணவர்கள் விதிகளை எவ்வாறு பயன்படுத்துவது என்பதைப் புரிந்துகொண்டாலும், அவற்றை சரியான சூழ்நிலைகளில் எப்போது பயன்படுத்துவது என்று தெரியாமல் போகலாம். மேலும் சில மாணவர்களுக்கு இலக்கணம் சலிப்பாக அல்லது அர்த்தமற்றதாக தோன்றலாம். இது அவர்கள் கற்றுக்கொள்வதற்கும் ஈடுபடுவதற்கும் கடினமாக்குகின்றது. இதற்குக்

காரணம், ஆசிரியர்களின் கற்பித்தல் அணுகுமுறையாகும். இன்றைய மாணவர்கள் தங்களுக்குக் கற்பிக்கப்படும் அனைத்து விதிகளுக்கும் பயன்பாட்டு மரபுகளும் தங்கள் அறிவு ஏற்றுக்கொள்ளும் விளக்கங்களும் கூறப்பட வேண்டும் என்று எதிர்பார்க்கின்றனர். மாணவர்கள் எதிர்பார்க்கும் அளவுக்கு அறிவுப்பூர்வமான விளக்கத்தைக் கூறி கற்பித்தல் நடவடிக்கை நடத்த வேண்டியது ஆசிரியரின் கடமையாகும். ஆனால், சில ஆசிரியர்கள் மாணவர்களின் விருப்பதிற்கு ஏற்ப கற்பித்தலை நடத்துவதில்லை.

வேற்றுமை உருபுகள் சேர்ப்பதில் சில சிக்கல்கள் உள்ளன. சில சமயங்களில், எந்த வேற்றுமை உருபு சேர்க்க வேண்டும் என்பதை தீர்மானிப்பது கடினம். உதாரணமாக, "நான் புத்தகம் படித்தேன்" என்ற வாக்கியத்தில், "புத்தகம்" என்ற சொல்லுக்கு எந்த வேற்றுமை உருபு சேர்க்க வேண்டும்? இரண்டாம் வேற்றுமை உருபு ("ஐ") சேர்க்க வேண்டுமா அல்லது நான்காம் வேற்றுமை உருபு ("ஆல்") சேர்க்க வேண்டுமா? என்று. சில வேற்றுமைகள் ஒரே மாதிரியான பொருளைத் தரக்கூடும். எடுத்துக்காட்டாக, இரண்டாம் வேற்றுமை மற்றும் நான்காம் வேற்றுமை ஆகியவை செயல்பாட்டைக் குறிக்கலாம். ஒரே உருபுகள் வெவ்வேறு வேற்றுமைகளுக்குப் பயன்படுவது சில உருபுகள் ஒன்றுக்கு மேற்பட்ட வேற்றுமைகளுக்குப் பயன்படுத்தப்படலாம். எடுத்துக்காட்டாக, "ஐ" என்ற உருபு இரண்டாம் வேற்றுமை மற்றும் ஐந்தாம் வேற்றுமை ஆகியவற்றிற்குப் பயன்படுத்தப்படலாம். மாணவர்கள் சில சமயங்களில், எந்த வேற்றுமை உருபு சேர்க்க வேண்டும் என்பதை தீர்மானிக்க சூழலைப் பொறுத்து சிந்திக்க வேண்டும்.

மாணவர்கள் இலக்கணத்தில் சொற்றொடர் அமைப்பதில் பல சிக்கல்களை எதிர்கொள்கின்றனர். அதில் முக்கியமாக சொற்களின் வகை மற்றும் பயன்பாட்டை அறிந்து கொள்வதில் மாணவர்களுக்கு சீரமாமக உள்ளது. மாணவர்கள் பெயர்ச்சொற்கள், வினைச்சொற்கள், அடைமொழிகள், இணைப்புச் சொற்கள் போன்ற சொற்களின் வகைகளைப் புரிந்துகொள்வதில் கடினத்தை எதிர்நோக்குகின்றனர். மாணவர்கள் சொற்களை சரியான இலக்கண வடிவத்தில் பயன்படுத்துவதில் சிக்கல் ஏற்படுகின்றது. உதாரணமாக மாணவர்கள் பெயர்ச்சொல் + அடைமொழி + வினைச்சொல் கொண்டு வாக்கியம் அமைப்பதில் சிரமம் கொள்கின்றனர். அவன் (பெயர்ச்சொல்) அழகான (அடைமொழி) பூனை (பெயர்ச்சொல்) பார்த்தான் (வினைச்சொல்). இந்தச் சிக்கலை களைவதற்குதான் ‘ Story board’ எனும் அணுகுமுறையை பயன்படுத்தி கற்றல் கற்பித்தலை மேம்படுத்த இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ‘Story board’ அணுகுமுறையைப் பயன்படுத்தும் போது மாணவர்களின் இலக்கணம் புரிதலை மேம்படுத்தப்படுகின்றது.

'Story Board' அணுகுமுறையின் வழி ஐந்தாம் படிவம் மாணவர்களுக்கு தமிழ் இலக்கணம் கற்பித்தல்

**ஆய்வு நோக்கம்**

இந்த ஆய்வு இரண்டு நோக்கங்களை அடைவதைக் கருத்தில் கொண்டு மேற்கொள்ளப்பட்டது. அவை;

1. தமிழ் இலக்கணம் புரிதலில் மாணவர்கள் எதிர்நோக்கும் சிக்கல்களை கண்டறிதல்.

2. 'Story board' மூலம் தமிழ் இலக்கணம் புரிதலைப் மேம்படுத்துதல்.

**வினா**

வினா 1: ஐந்தாம் படிவம் மாணவர்கள் இலக்கணம் கற்பதால் எவ்வாறான சிக்கலகள்களை எதிர்நோக்குகின்றனர்?

மாணவர்கள் தமிழ் இலக்கணம் கற்பிப்பதால் எதிர்நோக்கும் சிக்கல்கள்

பகுப்பாய்வு செய்யும் சிரமம்

முன்னறிவின் தேர்வின் பொழுது மாணவர்களால் இக்கேள்விக்கு பதில் அளிக்க முடியவில்லை. இதற்க்கு காரணம் ஆழமான புரிதலைப் பெற வேண்டும் எனில், கேள்வியின் அர்த்தத்தை மாணவர்கள் முழுமையாகப் புரிந்து கொள்ளுதல் அவசியமாகிறது. மாணவர்கள் கேள்வியே புரியாமல் தவறான பதில் அளித்துள்ளனர். சில மாணவர்கள் வினைச்சொற்களின் பொருளை முழுமையாகப் புரிந்து கொள்ளாமல், சிக்கலான அல்லது ஏற்றக்கூடிய வாக்கியங்களை அமைக்க இயலாது. சரியான பதிலைத் தேர்ந்தெடுக்க, அவர்களுக்கு வினைச்சொற்கள் தொடர்பான விரிவான அறிவு தேவைப்படும்.

வினாக்கள் சிக்கலான விதத்தில் அமைப்பது

இந்த ஒரு கேள்வி எளிமையாக இருக்கும் போது, மாணவர்கள் அதை மிகக் கடினமாக புரிந்து கொள்கின்றார்கள். இது சரியான பதிலைத் தேர்ந்தெடுக்கத் தடையாக அமைந்தது. வினாக்களைப் புரிந்து கொள்ள சரியான விளக்கத்தைப் பெற்றிராத மாணவர்களே அதிகமாக இருக்கிறார்கள். விதிகள் எவ்வாறு செயல்படுகின்றன என்பதற்கான விளக்கங்கள் தெளிவாக இல்லாவிடில், மனப்பாடம் செய்வது சிரமமாக இருகிறது. இதன் மூலம் மாணவர்களுக்கு கருத்துக்களை மனப்பாடமாக கற்றுக்கொள்ள சிரமமாக இருப்பது தெளிவாகிறது.

மொழி தடைகள்

அடுத்தாக பொருள் புரியாமல் பதில் அளித்ததை அறிய முடிகின்றது. தமிழ் மொழியில் சொற்களின் பொருள், உபயோகிப்பு போன்றவை மாற்றம் பெறலாம். ஒரு சொல்லின் பல அர்த்தங்கள் இருந்தால், மாணவர்கள் குழப்பமடையலாம். இது குறிப்பாக, வினாக்கள் சிக்கலான சொற்களைக் கொண்டிருந்தால் மேலும்கூட கடினமாக இருக்கும்."பிறவினை" என்ற சொல் எங்கு பயன்படுத்தப்படுகிறது, அது எந்த சூழலில் பொருந்துகிறது என்பதைச்

சரியாக விளங்காமல், மாணவர்கள் பதிலளிக்க முயற்சித்தால் பிழை ஏற்படும். .தமிழ் எழுத்து இலக்கணத்தில் சில குறுக்குவழிகள் மற்றும் சிக்கலான விதிகள் உள்ளன, அவற்றை மெய்யாகக் கற்றுக்கொள்ள எழுதிக் கற்றல் முக்கியமாகும். இவை பேச்சு மொழியில் அனுசரிக்கப்பட வேண்டிய கட்டாயம் இல்லாததால், பேச்சு இயல்பாக இருக்கும். பேசிக் கற்றுக்கொள்வது இயல்பான பேச்சு நடைமுறையைப் போலவே இருப்பதால், சலிப்படையாமல் கற்றுக்கொள்வது சாத்தியம். இலக்கணத்தை எழுதுவது முறைகளில் எளிதில் சலிப்பூட்டக்கூடியது.

அண்மையில் கற்ற விஷயங்கள் மறக்கப்படுதல்

மேலும் மாணவர்கள் பொதுவாகச் சமீபத்தில் கற்றுக்கொண்ட விஷயங்களை எளிதில் மறந்து விடலாம். இதனால், இந்த கேள்வியை அடிப்படையில் பதிலளிக்கச் சில மாணவர்கள் சீராமபட்டனர்.மாணவர்கள் தன்னுடைய சமீபத்தில் கற்றுக்கொண்ட தன்வினை, பிறவினை என்ற இலக்கணக் கூறுகளை நினைவில் வைத்திருக்க வேண்டும். மறக்கும்போது, அவர்கள் பிழையான அல்லது மூலவழியாக இல்லாத பதில்களை அளிக்கலாம்.

விடைகளில் துல்லியமான பதில் தர முடியாமை

அதுமட்டுமின்றி பெரும்பலுமான மாணவர்களுக்கு சரியான பதில் தெரிந்தாலும் விரிவான பதில் அளிக்கும்போது, துல்லியமாகப் பதிலளிக்க முடியாமலும், தேவையற்ற தகவல்களைச் சேர்த்துகொள்கின்றார்கள். மாணவர்கள் புணர்ச்சி விதிகளுக்கு ஏற்ப துல்லியமாக பதில் அளிக்க வேண்டும். வலிமிகும் இடங்கள் போன்ற விஷயங்களை சரியாகக் கண்டறிய முடியாவிட்டால், அவர்கள் ஏற்கனவே கற்ற இலக்கண விதிகளைப் பயன்படுத்தி தவறான பதிலை அளிப்பார்கள்.

**முடிவு**

“Storyboard” அணுகுமுறை வழி, படிவம் 5 மாணவர்களுக்கு தமிழ் இலக்கணம் கற்பித்தல் எனும் ஆய்வை ஆய்வாளர் மேற்கொண்டார். இவ்வாய்வின் நோக்கம், மாணவர்களின் தமிழ் இலக்கண அடைவுநிலையை storyboard முறையின் மூலம் மேம்படுத்துவதாகும். ஆய்வாளர் முதலில் மாணவர்களின் முன் அறிவு நிலையை மதிப்பீடு செய்ய முன்னறித் தேர்வுகளை நடத்தி, அவர்களின் பலவீனமான பகுதிகளை கண்டறிந்தார். முன்னறித் தேர்வின் முடிவுகள் மாணவர்கள் தமிழ் இலக்கணத்தில் பல்வேறு சிக்கல்களை எதிர்கொண்டுள்ளதாக காட்டியது.

இதனைத் தொடர்ந்து, ஆய்வாளர் storyboard முறையைப் பயன்படுத்தி, கற்றல் செயல்முறைகளை சுவாரஸ்யமாக மாற்றினார். மாணவர்களுக்கு ஒழுங்கமைக்கப்பட்ட காட்சிப்படங்களின் மூலம் தமிழின் இலக்கண பாடங்களை விளக்கி, அவர்களின் கற்பனை திறனையும் மொழிச்சொற்களின் பயன்பாட்டையும் ஊக்குவித்தார். இந்த முறையின் மூலம், மாணவர்கள் கற்றலில் மேலும் ஈடுபடத்தூண்டப்பட்டனர்.

ஐந்து வாரங்கள் கொண்ட நடவடிக்கைகளின் மூலம் மாணவர்களுக்கு storyboard அடிப்படையிலான பயிற்சிகள் வழங்கப்பட்டன. இந்த முயற்சிகளின் அடிப்படையில், அவர்கள் கற்றல் செயல்முறையில் ஆழ்ந்த பங்கேற்பையும், வளர்ச்சியையும் கண்டதுடன், பின்னறித் தேர்வின் முடிவுகள் முன்னேற்றத்தை உறுதிசெய்தன. முன்னறித் தேர்வில் குறைந்த மதிப்பெண்களைப் பெற்ற மாணவர்கள், பின்னறித் தேர்வில் அதிகரித்த மதிப்பெண்களையும் தரநிலையையும் பெற்றனர்.

இதன் மூலம், storyboard அணுகுமுறை தமிழ் இலக்கணம் கற்பித்தலின் விளைவுத்திறனை மேம்படுத்துவதில் பயனுள்ளதாக இருந்தது என்பதைத் தேர்வுகள் வெளிப்படுத்தின.

**REFERENCES**

Indrapurnama, G., Fakhruddin, A., & Kustini, T. (2022). The Use of Student-Centered Learning Method For Speaking Skill in EFL Classroom. Papanda Journal of English Education, 1(2), 67-73. e-ISSN: 2830-5477. https://ejournal.papanda.org/index.php/pjee/article/view/160

Jabamoney, S., Devi, M., & Thambi, F. (2022). தமிழாய்வியல் நெறிமுறை. In இயல் 3 ஆய்வு முன்னோடி (pp. 25-33). Universiti Pendidikan Sultan Idris. ISBN: 978-967-2851-66-0